| O.S.No. 410/2019 | DW1: திரு. வேலு த/பெ. திரு. மாணிக்கம் | 06-10-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் கூலி வேலை செய்கிறேன். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண். 170, 171, 174 ஆகும். தாவா சொத்தினை யார் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் நான்தான் பயிர் செய்து வருகிறேன். சர்வே எண். 174 சம்மந்தமாகத்தான் எனக்கும் வாதி விநாயகம் (எ) விஜயனுக்கும் அடிக்கடி பிரச்சனை வருகிறது என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 174-ல் தான் கிணறு, பம்பு செட், மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான்.

2. 10.07.1978-ல் பச்சையப்பன் கவுண்டரின் மனைவி சுருளியம்மாளிடமிருந்து என்னுடைய தந்தை கிரையம் பெற்ற விஷயம் எனக்கு தெரியும். அந்த சொத்தினை கிரையம் பெற்ற நாள் முதல் என் தந்தைதான் அனுபவித்து வந்தார். என் தந்தை எந்த ஆண்டு இறந்தார் என்று ஞாபகம் இல்லை. எனது தந்தை இறந்தபின்பு நான், வாதி, சங்கர், ஆகியோர் கூட்டுக்குடும்பமாகத்தான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான்.

3. 25.09.1980-ல் கன்னிகவுண்டர் என்பவரிடமிருந்து எனது தந்தை கிரையம் பெற்ற விஷயம் எனக்கு தெரியும், அதை பொதுவாகத்தான் அனுபவித்து வருகிறோம். அந்த சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சொத்தினை என் தந்தை அனுபவித்து வந்தார், அவரது இறப்பிற்கு பிறகு நாங்கள் பொதுவாக அனுபவித்து வந்தோம். தற்போதும் மேற்படி சொத்தினை நான், வாதி, 2-ம் பிரதிவாதி ஆகியோர் கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறோம்.

4. எனது தந்தை மாணிக்க கவுண்டர் இறந்தபின்பு, குடும்ப செலவுகள் மற்றும் எனது திருமணத்தை வாதிதான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. மாணிக்க கவுண்டர் உயிருடன் இருந்தபோது வெங்கடாச்சலம், புஷ்பா, சிதம்பரம் ஆகியோரிடம் ஒரு சொத்தினை கிரையம் வாங்கிய விஷயம் தெரியுமா என்றால் தெரியும், அந்த சொத்தினை நான்தான் கிரையம் வாங்கினேன். என் தந்தை உயிருடன் இருந்தபோதுதான் மேற்படி சொத்தினை 1990-ல் வாங்கினேன். அப்போது எனக்கு 24 வயது இருக்கும். அந்த சொத்தினை வாங்குவதற்கு வாதி ஒரு தொகையினை கொடுத்தார் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை.

5. மேற்படி சொத்து எனது பெயரில் ஏற்பட்டதால், அது குறித்து அந்த ஆவணத்தில் வாதியின் பெயர் இல்லை என்பதால் எனது தந்தை என்னிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. பின்னர் எனது தந்தை ஊரில் பஞ்சாயத்து செய்தார் என்றாலும், அந்த பஞ்சாயத்தில் என் பெயரில் கிரையம் பெற்ற சொத்தில் பாதியை வாதிக்கு கொடுத்துவிடுகிறேன் என கூறினேன் என்றாலும் சரியல்ல. மேற்படி சொத்தை பொறுத்து நானும், 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதிக்கு தெரியாமல் 29.11.1993 - ல் ஒரு பொய்யான ஆவணத்தை உருவாக்கிக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. அதன் பட்டா எண். 647 ஆகும்.

6. அந்த பத்திரத்தினால் எனது தந்தை என்னுடன் சண்டை போட்டு என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விஷயத்தை நான் மறைத்து பொய் சொல்கிறேன் என்றாலும், இது சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்தது என் பெயரில் கிரையம் பெற்ற சொத்தில் ஒரு பாகத்தினை வாதிக்கு

தருகிறேன் என பஞ்சாயத்தில் நான் கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நான் உறுதியளித்ததின் அடிப்படையில் வாதி அவரது பாகத்தினை அனுபவித்து வந்தார் என்றாலும், பின்னர் கிணறு வெட்டுவதற்கும், பம்புசெட்டிற்கும் வாதி அவரது பாகமாக பணத்தை கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

7. மாணிக்க கவுண்டர் உயிருடன் இருந்த காலத்தில் வாதி தாவா சொத்தில் பயிர் செய்துகொண்டு கிணறு மற்றும் பம்புசெண்ட்டினை பயன்படுத்தி வந்தார் என்றாலும், மாணிக்க கவுண்டர் இறந்த பிறகு நான் வாதியிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. இது சம்மந்தமாக வாதி மோரணம் காவல் நிலையம் மற்றும் திருவண்ணாமலை காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் நான் ஆஜரானேன். விசாரணை முடிவில் போலீசார் எதுவும் சொல்லவில்லை. மேற்படி விசாரணையில் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரத்தை தேடிக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

8. 3-வது அயிட்ட சொத்து விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியவில்லை. பட்டா எண். 275 சொத்து எந்த சொத்து என்று தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. எனது தந்தை மாணிக்க கவுண்டர் உயிருடன் இருந்தபோதே எங்களுக்கு சொத்துக்கள் பிரித்து கொடுக்கப்பட்டு தனித்தனியே அனுபவித்து வருகிறோம் என்றாலும், நான் ஒரு பொய்யான கிரைய பத்திரத்தை உருவாக்கிக்கொண்டு வாதியின் உரிமையை மறுக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

9. குடும்ப கடன் ரூ.1,35,000/-த்தை நான் செலுத்தியதாக சொல்வது தவறு என்றாலும், மேற்படி கடனை வாதி செலுத்தியதால்தான்

அவருக்குரிய பாகத்தை தருகிறேன் என நான் சொன்னேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் வாதிக்கும் ஒரு பாகம் உரிமை உள்ளது என்றாலும், நான் ஒரு பொய்யான பத்திரத்தை உருவாக்கிக்கொண்டு வாதியின் பாகத்தை ஏமாற்றி வருகிறேன் என்றாலும் சரியல்ல. அதனால், வாதியின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**